©
தமிழ்நாடு அரசு
2021

கையெழுத்துத் தொடர்

# நிதித் (ஓய்வூதியம்) துறை

**அரசாணை (நிலை) எண்.02, நாள் : 04.01.2021.**
**(சார்வாரி மார்கழி-20, திருவள்ளுவர் ஆண்டு 2051)**

**சுருக்கம்**

**பொங்கல் பண்டிகை, 2021** – **'C'** மற்றும் **'D'** பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள்/அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**படிக்கப்பட்டது**:-

1. அரசாணை (நிலை) எண்.03, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்:06-01-2020.
2. அரசாணை (நிலை) எண்.1, நிதி (படிகள்) துறை, நாள்: 04-01-2021.

-oOo-

**ஆணை:**

'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற (**'C'** மற்றும் **'D'** பிரிவு ஊதிய விதங்கள் (சாதாரண நிலை) இந்த அரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன) மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து **'C'** மற்றும் **'D'** பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்துவகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc Pensioners of all categories) (அதாவது **1-10-2017** முதல் சிறப்பு ஓய்வூதியமாக **ரூ.2,000/-** பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள், ஊராட்சி செயலர், கிராம நூலகர்கள், பெருக்குபவர்கள் / துப்புரவுப் பணியாளர்கள் / துப்புரவாளர்கள், தோட்டக் காவலர், வேட்டைத் தடுப்பு காவலர், காவல் நிலைய துப்புரவாளர்கள் மற்றும் ஆயா உட்பட) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.**500/-** (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**2.** இவ்வாணை தற்காலிக ஓய்வூதியம் பெறும் அனைத்து **'C'** மற்றும் **'D'** பிரிவு ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும். இந்தப் பொங்கல் பரிசுத்தொகை, **04-01-2021** நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு, அனுமதிக்கத்தக்கதல்ல.

**3. 06.01.2020** நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி அவர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின், அவர்கள் இந்தப் பொங்கல் பரிசுத்தொகையை பெற

த.பி.பா.

பெற தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். இதற்காக, இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்குமுன், சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்த சான்றிதழைப் பெறுமாறு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**4.** இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது:-

(அ) உலேமா உதவித் தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் பெறும் சிறப்பு ஓய்வூதியதாரர்கள்;

(ஆ) பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடியவாறான தற்காலிக மிகை ஊதியம் (Ad-hoc Bonus) / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் (Special Ad-hoc Bonus) பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

(இ) 'A' மற்றும் 'B' பிரிவு பதவிகளிலிருந்து ஓய்வுபெற்ற அனைத்து அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்திந்தியப் பணி அலுவலர்கள், பல்கலைக்கழக மானியக் குழு / அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் உட்பட.

**5.** ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின் (Pension Pilot Scheme) கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், பொங்கல் பரிசுத் தொகை வழங்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:-

(i) அரசுச் செலவில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பணவிடை மூலம் அனுப்பப்படுவதைப் பொருத்தமட்டில், இந்தப் பொங்கல் பரிசுத் தொகையும் அரசு செலவில் பணவிடை மூலம் அனுப்பப்பட வேண்டும்.

(ii) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை வங்கிகள் மூலம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில்,

(அ) பட்டியலுக்குத் தொகை அளிக்க காசோலை / மின்னணு தீர்வை முறை முறை (ECS) பின்பற்றப்படும் சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலை கருவூலங்களில், காசோலைகள் வெளியிட்டு அவற்றை தொகை செலுத்தும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு அனுப்ப சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கும், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலைக் கருவூலங்களின் அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அந்தக் காசோலைகளுடன், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை தொகையை வரவு வைக்க அந்தந்த ஓய்வூதியதாரர்கள் / குடும்ப

ஓய்வூதியதாரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஆ) பட்டியலுக்கு தொகை அளிக்க காசோலை / மின்னணு தீர்வை முறை (ECS) இல்லாத வங்கி சார்ந்த சார் கருவூலங்களில் (Banking Sub-Treasuries) வங்கிக் கணக்கு காசோலை / வங்கி வரைவு காசோலை எடுத்து அவற்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்காக சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் வங்கிக் கிளைகளுக்கு அவற்றை அனுப்பி வைக்க சார்நிலைக் கருவூல அலுவலர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. பொதுத் துறை வங்கித் திட்டத்தின் (**Public Sector Bank Scheme**) கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், 'C' மற்றும் 'D' பிரிவு ஓய்வூதியதாரர்கள் / அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் கணக்கில் நேரடியாக மொத்த தொகையை வரவு வைக்க அனைத்துப் பொதுத் துறை வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

7. மாநில தொகு நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

> "2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் – 800. ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AF. ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் பொங்கல் பரிசு – 327. ஓய்வூதியங்கள் – 09. ஏனையவை,
>
> பழையது: (த.தொ.கு.2071 01 800 AF 2799)
> IFHRMS: (த.தொ.கு. 2071 01 800 AF 32709)".

முன்னாள் கிராம பணியமைப்பு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகை கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

> **"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் –800.** ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் – AK. ஏனைய செலவு - **முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் – 327. ஓய்வூதியங்கள்–09. ஏனையவை,**
>
> **பழையது: (த.தொ.கு.2071 01 800 AK 2799)**
> **IFHRMS: (த.தொ.கு. 2071 01 800 AK 32709)"**

8. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் கணக்கு வைத்துவரும் நிதி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களாக ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள் / அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு அத்தகைய நிதிகளிலிருந்து செய்யப்பட வேண்டும். சிறப்பு ஓய்வூதியம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகியோர்களை பொறுத்தவரை சிறப்பு ஓய்வூதியம்

பெற்று வழங்கும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் பத்தி 7-ல் உள்ள கணக்குத் தலைப்பில் இச்செலவினத்தை பற்று வைக்கப்பட வேண்டும்.

9. மேலே அனுமதிக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகையை ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம பணியமைப்பு அலுவலர்களுக்கு உடனடியாக பெற்று வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

10. 2020-2021-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் மு. சாய் குமார்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை- 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை- 600 022.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, ஆலை அம்மன் கோயில் அருகில், தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை- 18. (பெயரில்)

முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை- 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை- 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை- 600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை- 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை- 600 003.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
மாநகராட்சி ஆணையர், மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர் / தூத்துக்குடி / வேலூர் / தஞ்சாவூர் / திண்டுக்கல் / நாகர்கோவில் / ஓசூர் / ஆவடி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை- 600 035.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

<u>நகல் பெறுநர்:</u>
நிதி (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு- பொது II / வரவு செலவு - (BGC – GBM) / பொது)த் துறை, சென்னை-600 009.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை-600 035.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-600 035.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.

இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை–600 001.

இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில்நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்)

பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-600 035. மூலமாக.

அனைத்து பொதுத் துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், சென்னை-35. மூலமாக.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை-600 006.

தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை- 600 010.

தலைவர், தமிழ் நாடு ஓய்வூதியர் சங்கம், பதிவு எண்-84/2010 எண்.7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப் பேட்டை, சென்னை- 600 015.

தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.

தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண்.35 ,திரு.வி.க.நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 600 014.

தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை-600 040.

தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண்.38-பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்து காளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.

தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், ப்ளாட் எண்.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.

தலைவர், ஓய்வுபெற்ற வேளாண்மை பட்டதாரி சங்கம், கே-பிளாக், எண்.2, சாலை ரோடு, ஹவுசிங் யூனிட், திருச்சி-621 003.

தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, எண்.11, நாச்சிமுத்து லேஅவுட், கே.கே.புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

தலைவர், தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்கம், வரதப்பன் தெரு, கோட்டை, சேலம்-636 001.

தலைவர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஓய்வூதியர்கள் சங்கம், டி.என்.ஏ.யு வளாகம், கோயம்புத்தூர்-641 003.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம், எண்.3(ஜி1), கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.

தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம், எண்.3/454, வீரமா முனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037.

தலைவர், ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் சங்கம், எண்.3/145, தெற்குத் தெரு, கம்பரசம்பேட்டை அஞ்சல், திருச்சிராப்பள்ளி–620 101.

தலைவர், தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், □□.அப்பன் இல்லம், 3/1076-2, முத்துராமலிங்கம் நகர், விருதுநகர்.

தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், பிளாட் எண். 1740, B2, இரண்டாவது தளம், 18-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை-600 040.

தலைவர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொதுப்பணித் துறை ஊழியர் சங்கம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், சேப்பாக்கம், சென்னை-600 005.

தமிழ்நாடு இந்த் அப்சார்பி பென்சனர் நலச் சங்கம், எண் 12, 9-வது தெரு டான்சி நகர், வேளச்சேரி, சென்னை -600 042.

தலைவர், தமிர்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அனைத்து ஓய்வூதியர்கள் சங்கம், எண்.50A. காந்திஜி தெரு, துரப்பாடி வேலூர் – 632 002.

தலைவர், கிராம உத்தியகஸ்தர்கள் முன்சீப் கர்ணம், ஓய்வூதியர்கள் சங்கம், 10- D, ராதாகிருஷ்ணன் காலனி, முதல் தளம், சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சி.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, 1/49 நெடுங்கல் அஞ்சல், காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 112.

செயலர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற நீதிபதிகள் நல சங்கம், D- 39 5வது முதல் குறுக்குத் தெரு, பாரத் ரத்னா ராஜீவ் காந்தி நகர்,புதூர் அம்பதூர், சென்னை -600 053.

-/ஆணைப்படி : அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்.

# இணைப்பு

(அரசாணை (நிலை) எண்.2, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 04-01-2021)

## 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களின் ஊதிய விதங்கள் (சாதரண நிலை)

| Sl. No. | Group | Pre-revised Scale of Pay w.e.f. 1-6-1988 | Pre-revised Scale of Pay w.e.f. 1-1-1996 | Pre-revised Scale of Pay w.e.f. 1-1-2006 | | Revised Pay Level of the Pay Matrix w.e.f. 1-1-2016 (notional) mbf 1-10-2017 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Pay Band + | Grade Pay | Level | Minimum - | Maximum |
| (1) | (2) | (3) | (4) | (5) | | (6) | | |
| 1 | D | 750-12-870-15-945 | 2550-55-2660-60-3200 | PB-1A Rs.4800-10000 | 1300 | 1 | 15700 - | 50000 |
| 2 | C | 775-12-835-15-1030 | 2610-60-3150-65-3540 | PB-1A Rs.4800-10000 | 1400 | 2 | 15900 - | 50400 |
| 3 | C | 800-15-1010-20-1150 | 2650-65-3300-70-4000 | PB-1A Rs.4800-10000 | 1650 | 3 | 16600 - | 52400 |
| 4 | C | 825-15-900-20-1200 | 2750-70-3800-75-4400 | PB-1 Rs.5200-20200 | 1800 | 4 | 18000 - | 56900 |
| 5 | C | 950-20-1150-25-1500 | 3050-75-3950-80-4590 | PB-1 Rs.5200-20200 | 1900 | 5 | 18200 - | 57900 |
| 6 | C | 975-25-1150-30-1660 | 3200-85-4900 | PB-1 Rs.5200-20200 | 2000 | 6 | 18500 - | 58600 |
| 7 | C | 1100-25-1150-30-1660 | 3625-85-4900 | PB-1 Rs.5200-20200 | 2200 | 7 | 19000 - | 60300 |
| 8 | C | 1200-30-1560-40-2040 | 4000-100-6000 | PB-1 Rs.5200-20200 | 2400 | 8 | 19500 - | 62000 |
| 9 | C | 1320-30-1560-40-2040 | 4300-100-6000 | PB-1 Rs.5200-20200 | 2600 | 9 | 20000 - | 63600 |
| 10 | C | 1350-30-1440-40-1800-50-2200 | 4500-125-7000 | PB-1 Rs.5200-20200 | 2800 | 10 | 20600 - | 65500 |
| 11 | C | 1400-40-1600-50-2300-60-2600 | 5000-150-8000 | PB-2 Rs.9300-34800 | 4200 | 11 | 35400 - | 112400 |
| 12 | C | 1600-50-2300-60-2660 | 5300-150-8300 | PB-2 Rs.9300-34800 | 4300 | 12 | 35600 - | 112800 |

***Explanation:***—For the purpose of classification (i.e. Groups) of Government Servants, persons holding posts in the Selection Grade or Special Grade before 1.6.2009 shall be deemed to be under the respective groups in which such posts in the ordinary grades are classified. [FR 9-A].

**-/ உண்மை நகல் /-**

பிரிவு அலுவலர்.